தினமலர்

# யானைக்கால் மாத்திரை சாப்பிட்டு இறந்தவர்களுக்கு தலா ரூ.1 லட்சம்

## மனித உரிமைகள் ஆணையம் உத்தரவு

திருச்சி, மார்ச் 25-

திருச்சியில் யானைக் கால் நோய் தடுப்பு மாத் திரை சாப்பிட்டு இறந்தவர் கள் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் வழங்க தேசிய மனித உரிமைகள் ஆணை யம் உத்தரவிட்டுள்ளது.

தமிழக சுகாதாரத்துறை மூலம் யானைக்கால் நோயை கட்டுப்படுத்த நட வடிக்கை மேற்கொள்ளப் பட்டு வருகிறது. கடந்த 2004ம் ஆண்டு திருச்சி மாவட்டத்தில் யானைக் கால் நோய் தடுப்பு மாத்திரை விநியோகம் செய்யப்பட்டது. இந்த மாத்திரைகளை சாப்பிட்ட திருச்சி காஜாமலையை சேர்ந்த பாலாஜி, கணேசபு ரத்தைச் சேர்ந்த தங்கம், வேலு, ஸ்ரீரங்கன், பனமங்க லத்தைச் சேர்ந்த சையது பாட்ஷா, திருமானூரைச் சேர்ந்த சந்தானம் ஆகிய 6 பேர் இறந்தனர். மேலும், திருச்சி திருவானைக்காவ லைச் சேர்ந்த ராஜகுமாரி (48), தங்கராஜ் மகள் மதி (16) உட்பட 22 பேர் வயிற்றுப்போக்கு உட்பட பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகினர். இது தொடர் பாக மக்கள் கண்காணிப்ப கத்தின் நிர்வாக இயக்குனர் ஹென்றி டிரிப்பேன் டில்லி யில் உள்ள தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் செய்தார். இதுபற்றி பல்வேறு கட்டங்களில் விசாரணை நடத்தப் பட்டது. இதன் தீர்ப்பு சமீ பத்தில் வெளியானது. அந்த தீர்ப்பில் யானைக்கால் நோய் தடுப்பு மாத்திரை சாப்பிட்டு உயிரிழந்த 6 பேர் குடும்பங்களுக்கும் தலா ரூ.1 லட்சம் வீதம் ரூ.6 லட்ச மும், பாதிக்கப்பட்டவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.10 ஆயிரமும் வழங்க உத்தரவி டப்பட்டது. மேலும், இந்த தொகையை 8 வாரகாலங்க ளுக்குள் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கி அது தொடர்பான அறிக் கையை சமர்ப்பிக்கும்படி மாநில தலைமைச்செய லாளருக்கு உத்தரவிடப் பட்டுள்ளது. இதுகுறித்து மக்கள் கண்காணிப்ப கத்தின் மாநில சட்டத் துறை ஒருங்கிணைப்பாளர் வக்கீல் மார்ட்டின் விடுத்துள்ள அறிக்கையில், தமிழகத்தில் போலி மருந்து கள், காலாவதியான மருந்து கள், அபாயகரமான மருந்து கள், மேற்கத்திய நாடுகளில் தடை செய்யப்பட்ட மருந்து கள், தேவையற்ற மருந்து கள், மருத்துவ குணாம்சம் இல்லாத மருந்துகள் என பல்லாயிரக்கணக்கான போலி மருந்துகள் சந்தை யில் விற்கப்பட்டு வரு கின்றன. மத்திய மருந்து கட்டுப்பாட்டு அதிகாரியால் தடை செய்து பரிந்துரைக் கப்பட்ட நூற்றுக்கணக் கான கூட்டு மருந்துகள் தாராளமாக சந்தையில் விற்கப்படுகின்றன. இந்த போலி மருந்துகள் மக்க ளுக்கு விற்கப்படுவது மக்க ளின் நலவாழ்வு உரிமை களையும், மனித உரிமை களையும் மீறிய செயலா கும். அனைத்து வகையான போலி மருந்துகளையும் சந்தையில் இருந்து முற்றி லுமாக அகற்ற தமிழக அரசையும் மத்திய அரசை யும் மக்கள் கண்காணிப் பகம் கேட்டுக் கொள்கிறது என குறிப்பிட்டுள்ளார்.

# Hike relief money for DEC victims: NHRC tells TN Government

**Express News Service**
**Tiruchy, March 24**

NATIONAL Human Rights Commission (NHRC) has directed the Tamil Nadu government to give a compensation of Rs 1 lakh each to kins of the victims who died after consuming Di Ethyl Carbamazine (DEC) tablets for filariasis prevention here.

Sources said the Tamil Nadu government distributed the DEC tablets to prevent elephantiasis during September 4, 5 and 6, 2004 through the government midday meal scheme staff, nurses of municipal hospitals. The medicines were also distributed in 13 districts including Tiruchy both in urban and rural areas.

It was later learnt that as many as 22 people developed vomiting, giddiness, headache and other problems after consuming the tablets. Six people, Thangam of Ganesapuram, Balayi of Khajamalai, Velu of Ganesapuram, Seerangan of Ganesapuram, Sadiq Batsha of Panamangalam and Santhanam of Tirumanur died due to the several complications after consuming the tablets. Meanwhile, People's Watch, a Human Rights Organisation, had petitioned the National Human Rights Commission on December 9, 2004 after an onsite verification of the incident petitioned the NHRC to direct the TN government to stop distributing DEC tablets and to provide compensation compensation to the victims and govt to take responsible for the deaths. Based on the petition, NHRC directed the State government to provide compensation to the deceased. On January 8, 2010, the State Government had announced a sum of Rs 50,000 each to the next of kin of six deceased.

However, on March 5, 2010, NHRC directed the State government to give a compensation of Rs 1 lakh each to the next of kin of six deceased as the earlier compensation was not sufficient. Similarly, the Commission has also instructed the State government to distribute a compensation of Rs 10,000 each to all the 22 persons who suffered sickness.

Meanwhile, the State Coordinator (Law) of People's Watch advocate S Martin appealed to the State and Centre to control the sale of fake drugs and to ban fixed dose combination which are being sold in the State market.